# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 24.11.2021 supeedsam.com supeedsam@gmail.com







# கிண்ணியாவை உலுக்கிய படகு விபத்து

## 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் பலி; கிண்ணியா எங்கும் சோகமயம்



(திருமலை ரவ்பீக் பாயிஸ், பாறூக் ஷிஹான்)

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் மோட்டார் பொருத்தப்பட்ட மிதப்பு பாலம் நேற்று காலை விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் மரணித்த அதேவேளை,குறித்த ஆறுபேரில், இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஐவர் அடங்குவதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

4 மாணவர்கள் உட்பட ஆறு பேர் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.அவர்களில் 30 வயது தாயும், அவரது 6 வயது மகனும், ஒன்றரை வயது மகளும் உயிரிழந்துள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

03 ஆம் பக்கத்தில்...

## குறிஞ்சாக்கேணி படகு விபத்து தௌபீகின் வீடு மீது தாக்குதல்



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

குறிஞ்சாக்கேணி பாலம் விவகாரத்தில் தீர்வில்லை எனக்கூறி முஸ்லீம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தௌபீகின் வீட்டின் மீது பொதுமக்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் படகு பாதை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சிறுவர்கள் உட்பட எழுவர் மரணமடைந்துடன் குறித்த சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

03 ஆம் பக்கத்தில்...

## முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்



(காந்தன்)

கிண்ணியாவில் இடம்பெற்ற 'படகுப் பாதை' விபத்து சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு

03 ஆம் பக்கத்தில்...

## படகு விபத்திற்கு காரணம் யார்?

### விளக்கினார் அமைச்சர் ஜொன்ஸ்டன்



(நமது நிருபர்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் எதிரணி தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்களின் இரங்கல்களையும், அனுதாபங்களையும் தெரிவித்து அரசாங்கத்தை சாடி பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருந்த நிலையில் கிண்ணியா

03 ஆம் பக்கத்தில்...

## அரசின் அசட்டையே விபத்துக்குக் காரணம்

### சபையில் ஹக்கீம் குற்றச்சாட்டு!



(அசாம்)

கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் நேற்று இடம்பெற்ற படகு விபத்தானது, அரசின் அசட்டை காரணமாகவே நடந்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டினார்.

03 ஆம் பக்கத்தில்...




## கிண்ணியாவில் பதட்டம்: மக்கள் திரண்டு போராட்டம்



(கிண்ணியா நிருபர்கள்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேசத்திற்கு உட்பட்ட குறிஞ்சாக் கேணிப் பகுதியில் ஆற்றில் பயணித்த படகு விபத்துக் குள்ளாகிய நிலையில் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு

03 ஆம் பக்கத்தில்...



மட் /மட் /சிவாநந்தா வித்தியாலயம் தேசியபாடசாலை மாணவன் பா.பிரசோபன் 2020 நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றி மாற்றுதிறநாளிகளுள் தேசியமட்டத்தில் இரண்டாவது நிலையினைப் பெற்றுசாதனை படைத்துள்ளார் இவர் கௌரவ பிரதமர் மற்றும் கௌரவ கல்விஅமைச்சர் ஆகியோரால் 21/11/2021ல் அலரிமாளிகையில் வைத்துப் பாராட்டப்பட்டபோது.






# கிண்ணியா குறிஞ்சாக்கேணி போக்குவரத்தில் பாதுகாப்பான மாற்றுப் பாதை இல்லாமையே அனர்த்தத்துக்கு காரணம்

## பாராளுமன்றில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலம் அமைத்தலின் போது பயணிகளுக்கென பாதுகாப்பான மாற்றுப் போக்குவரத்து ஒன்று அமைக்கப்படாமையின் காரணமாகவே பேரனர்த்தம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் இழுவை படகு கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் நேற்று (23) பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

ஒரு இலட்சம் மக்கள் வாழ்கின்ற கிண்ணியா பிரதேசத்திலே, இன்று காலை துக்ககரமான அனர்த்தம் ஒன்று ஏற்பட்டு, இதுவரை 0% பேர் மரணமடைந்ததாக நாம் அறிகின்றோம். அதில் ஒரே வீட்டிலே எட்டு வயது, ஆறு வயதை நிரம்பிய இரண்டு மாணவர்கள் உட்பட நான்கு மாணவர்களும், ஏனைய மூன்று நபர்களும் உயிரிழந்துள்ளார்கள்.

வீதி அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தற்போது இந்த சபையிலே இருக்கின்றார். கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலம் அமைக்க நீங்கள் எடுத்த முயற்சிக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனினும். ஒரு இலட்சம் மக்கள் வாழும் இந்தக் கிண்ணியா பிரதேசத்தில் ஒரு பாலத்தை நிர்மாணிப்பதாக இருந்தால், அந்தப் பக்கம் உள்ள 2% ஆயிரம் குடும்பங்களையும், இந்தப் பக்கத்தில் உள்ள 3 ஆயிரம் குடும்பங்களையும் இணைக்கும் அந்தப் பிரதேசத்தில், 11 பாடசாலைகளும் இருக்கின்றன என்பதை கவனத்திற்கொண்டும், ஒரு நாளைக்கு எட்டாயிரம் பேர் அதனூடாக பயணிகின்றனர் என்பதை கருத்திற்கொண்டு, மாணவர்கள் மற்றும் பயணிகளின் நலன்களை முன்னிறுத்தியும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அந்தப் போக்குவரத்துக்கு மாற்றீடாக இன்னுமொரு தற்காலிக பாதையை அமைக்கும் வகையில்,



சாத்தியக் கூற்று அறிக்கை ஒன்றை மேற்கொண்ட பின்னரே, அதன் பணிகளை தொடங்கியிருக்க வேண்டும்,

அண்மையிலே, கொழும்பிலே பாரிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மாதிரி வரைபடம் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்ததை நான் கண்ணுற்றேன். எனவே, கிண்ணியா குறிஞ்சாக்கேணி போக்குவரத்திலும் ஒரு தற்காலிக மாற்று ஏற்பாடொன்றை மேற்கொண்டிருந்தால், இந்த அனர்த்தத்தை தவிர்த்திருக்க முடியும். எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது அதிகாரிகள் இதற்கு யார் பொறுப்பு? என கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கிண்ணியா பெற்றோர்கள், தமது பிள்ளைகளை இழந்து மிகவும் வேதனையில் தவிக்கின்றனர். எனவே, இந்த சம்பவத்தின் பொறுப்புதாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதோடு மாத்திரமின்றி, அவசரஅவசரமாக பாதுகாப்பான மாற்றீட்டு போக்குவரத்து ஒழுங்கொன்றையும் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், இந்தப் பாலத்தை அமைப்பதற்கு உடனடி நிதி ஒதுக்கீட்டினை செய்து, அவசரமாக இதன் பணிகளை நிறைவுக்கு கொண்டுவர வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி அவர்களின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பாக ஒரு விடயத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது, இணங்களுக்கிடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதன் மூலமே இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இனங்களுக்கிடையே நல்லுறவும், முறையான சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, மதங்களுக்கு மதிப்பளிப்பதன் காரணமாகவே அந்த நாடுகள் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளன.

இலங்கையிலே அத்தனை வளங்கள் இருந்த போதும், இனங்களுக்கிடையிலே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டதனாலேயே, முப்பது வருட யுத்தம் இடம்பெற்றது. அது போன்று, கடந்த பத்து வருடங்களாக முஸ்லிம்களை குறிவைத்து தாக்குதல் மற்றும் அடாவடித்தனங்கள் இடம்பெற்றன.

இதன் தொடர்ச்சியாகவே, பயங்கரவாதி சஹ்ரானின் கேடுகெட்ட செயல்களால் சமூகங்கள் மேலும் துருவப்படுத்தப்பட்டன. இந்த தாக்குதலின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழு அறிக்கையின் படி தாக்குதலுக்கான பத்துக் காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. பயங்கரவாதிகள் கூறிய காரணங்களை ஏற்றுக்கொண்டு, அதனை நான் இங்கு நியாயப்படுத்த வரவில்லை. இந்தத் தாக்குதலில் சூத்திரதாரி உட்பட இதில் ஈடுபட்டவர்கள், உதவி செய்தவர்கள் அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அந்த ஆணைக்குழு அறிக்கையில், முதலாவது இடத்தில் சொல்லப்பட்டவாறு அல்லாஹ்வை ஏசியதாலும், மூன்றாவது இடத்தில் சொல்லப்பட்டவாறு அல்லாஹ் மீண்டும் பிறப்பார் என்று ஞானசார தேரர் கூறுகிறார் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான ஒருவரை ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக்கு தலைவராக நியமித்திருக்கின்றார்கள். எனவே, அந்த செயலணியின் தலைவர் பதவியிடூலிருந்து அவரை நீக்கி, சிறந்த மதகுரு ஒருவரை அல்லது புத்திஜீவி ஒருவரை நியமிக்க வேண்டுமென கோருகின்றேன் என்றார்.

# குறிஞ்சாக்கேணி சம்பவங்கள் இனியும் இடம் பெறுவதற்கு இடமளிக்கக்கூடாது

(அ . அச்சுதன்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இனியும் இடமளிக்கக்கூடாது எனவும் மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் நேற்று (23.11.2021) இடம்பெற்ற இழுவைப்படகு விபத்தில் பல மாணவர்கள் உட்பட பெற்றோரும் பரிதாபகரமாக



உயிரிழந்துள்ளனர் இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

கிண்ணியாவில் நேற்று (23.11.2021) இடம்பெற்ற இழுவைப்படகு விபத்தில் பல கனவுகளுடன் பாடசாலைக்குச் சென்ற பல சிறார்கள் பரிதாபகரமாக காவு கொள்ளப்பட்டிருக்கின்றார்கள் இது மிகுந்த மன வேதனையைத் தருகின்றது. இந்த இழப்பு ஈடுசெய்யப்பட முடியாதது. எனினும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அரசாங்கம் இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்னமும் இதுபோன்று பல பகுதிகளில் பாதுகாப்பற்ற இழுவைப்படகு மூலம் பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதைப் பயன்படுத்தி பயணத்தை மேற்கொள்பவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இவர்களின் போக்குவரத்துக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கும் முகமாக பாலங்களை அமைக்கும் நடவடிக்கையையும் அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் இதுபோன்ற சம்பவங்கள் இனியும் இடம் பெறக்கூடாது என்பதில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாழைச்சேனை, ஓட்டமாவடியில்
# வெள்ளக்கொடி பறக்க விட்டு துக்கம் அனுஷ்டிப்பு



(ந.குகதர்சன்)

வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதான வீதிகளில் வர்த்தக சங்கங்களின் ஏற்பாட்டில் இன்று (திங்கட்கிழமை) கிண்ணியாகுறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற சம்பவத்திற்கு துக்கதினம் அனுஸ்டிக்கும் வகையில் பிரதான வீதியில் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் நேற்று (23.11.2021) படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தினைத் தொடர்ந்து துக்கதினமாகப் பிரகடனப்படுத்தி வாழைச்சேனை, ஓட்டமாவடி வர்த்தக சங்கங்களினால் வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதான வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளன.

கிண்ணியாகுறிஞ்சாக்கேணி பகுதியில் நடைபெற்ற சோக சம்பவத்தினைய்ச்டுத்து வாழைச்சேனை, ஓட்டமாவடி வர்த்தக சங்கங்களினால் வர்த்தக நிலையங்களில் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடபட்டுள்ளதுடன், இச்சம்பவத்தில் மரணமடைந்தவர்களுக்காகவும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்காகவும் பிரார்த்தனைகளில் அனைவரையும் ஈடுபடுமாறும் வாழைச்சேனை, ஓட்டமாவடி வர்த்தக சங்கங்களின் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# முழு இலங்கையரையும் வேதனைக்குள்ளாக்கிய விபத்து
## நாமல் டுவிட்

கிண்ணியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தனது அனுதாபங்களை வெளியிட்டுள்ளார்.

கிண்ணியாவில் நேற்று காலை இழுவைப்படகு மூழ்கி விபத்திற்குள்ளானதில் பெருமளவானவர்கள் உயிரிழந்தனர்.

இதன் பிறகு கிண்ணியா பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களால் பதற்ற நிலை உருவானது.

அத்துடன், கிண்ணியா பிரதேச வியாபார நிலையங்கள் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையில், விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் தளத்தில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் அனுதாபம் தெரிவித்து பதிவொன்றினை இட்டுள்ளார்.

இன்றைய கிண்ணியா படகு விபத்து குறித்து அறிந்து நான் மிகவும் வேதனையுற்றேன் எனவும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது இரங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

# திருமலை நகரில் வர்த்தக நிலையங்களை மூடி துக்கம் அனுஷ்டிப்பு




திருகோணமலை குறிஞ்சாக்கேணி படகு விபத்தால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதற்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் திருகோணமலை நகரில் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.










திருகோணமலை கிண்ணியா பிரதேசத்திற்கு உட்பட்ட குறிஞ்சாக் கேணிப் பகுதியில் ஆற்றில் பயணித்த படகு விபத்துக்குள்ளாகிய நிலையில் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டதைக் காணலாம்.

# அரசியலமைப்பு வரைவு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்

(காந்தன்)

புதிய அரசியலமைப்பு வரைவு பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் செலவின தலைப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் இல்லை எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய முழுமையான உரை வருமாறு, உலகளாவிய கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாம் அரசாங்கம் என்ற ரீதியில் மக்களை பாதுகாப்பதற்கே முன்னுரிமை வழங்கினோம். மக்களின் பாதுகாப்பிற்காக நாம் உரிய நேரத்தில் சகல தீர்மானங்களையும் மேற்கொண்டோம் என்பதனை நாம் உங்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

அப்பணியை நிர்வகிப்பதற்காக பிரதமர் அலுவலகம் மேற்கொண்ட பணிகளை நினைவூட்டும் முகமாகவே நான் இவ்விடயத்தை கூறுகின்றேன்.

கொவிட் தொற்றின் ஆரம்பத்தில் எமது அரசாங்கம் அத்தியவசிய சேவைகளுக்காக ஜனாதிபதி செயலணியொன்றை நிறுவியது. அந்த ஜனாதிபதி செயலணியின் ஊடாக பிரதமர் அலுவலகத்திலிருந்து எமது கண்காணிப்பின் கீழ் மக்களின் அத்தியவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்கும், மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒரு நாளின் 24 மணிநேரமும் பிரதமர் அலுவலகம் செயற்பட்டது என்பதை நாம் உங்களுக்கு நினைவு படுத்த வேண்டும்.

அத்துடன் நாம் கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்தோம். மக்களுக்கு அத்தி



யவசிய சேவைகள் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்நின்றோம். வைத்தியர்கள், பாதுகாப்பு படையினர் ஆகியோர் அதற்காக தமது கடமைகளை நிறைவேற்றினர். கொவிட் தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை நாட்டை கடுமையாக பாதித்துள்ளது என்பதை நாம் அறிவோம். பெரும்பாலான தொழில்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. கொவிட் தொற்றிலிருந்து வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் இப்போது திட்டமிட்டுள்ளது. அதன்படி குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்களை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் இம்முறை சமர்பித்தார்.

மக்களின் சார்பிலான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி நாட்டிற்கு தேவை. இந்த கடினமான சூழ்நிலையில் அம்மக்கள் மீண்டெழக் கூடியதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

2019ஆம் ஆண்டில் நாம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரமொன்றையே பொறுப்பேற்றோம் என்பதையும் நினைவுகூர வேண்டும். இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. வழமைபோல் சொந்த அரசியலுக்காக விவாதம் செய்வதை பார்த்தோம். இருப்பினும் எதிர்கட்சிகளின் நேர்மறையான கருத்துகளுக்கு நாம் செவிமடுக்கிறோம். நீங்கள் சாதகமான கருத்துக்களை கூறினால் அவற்றிற்கு செவிமடுக்க நாம் தயாராக இருக்கிறோம். இத்தருணத்தில் நாட்டின் எதிர்காலத்திற்காக நாம் கூட்டாக தீர்மானங்களை எடுக்க வேண்டும். மக்களுக்காக அந்த கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த உயரிய பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களுக்கும் திறன் உள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான புதிய வணிகங்களைப் பதிவு செய்யும் தொழில்முனைவோரிடமிருந்து நாம் எந்தப் பதிவுக் கட்டணத்தையும் வசூலிக்கப் போவதில்லை. புதிய வர்த்தக சிந்தனைகளுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கட்டியெழுப்ப கைகோர்க்குமாறு எமது நாட்டு இளைஞர்களை அழைக்கின்றோம். மேலும் நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதற்கும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்களுக்கு வாக்குறுதி அளித்தால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். ஏறக்குறைய 25 வருடங்களாக தீர்க்கப்படாத ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாட்டை இந்த வரவு செலவுத் திட்டத்தில் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்துக்காக இதையெல்லாம் செய்கிறோம். சவால்களுக்கு மத்தியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எமது முயற்சிகளுக்கு நீங்கள் அனைவரும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

எதிர்க்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களுக்கு நாங்கள் உன்னிப்பாகக் செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம் இருப்பின், அவற்றை நாம் ஏற்று திருத்திக் கொள்ள எந்நேரத்திலும் தயாராக உள்ளோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். அரசியலமைப்பு பற்றிப் பேசினீர்கள். நாம் இப்போது வரைவைத் தயாரித்து வருகிறோம். அதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விவாதிப்போம் என்பதை நினைவூட்டுகிறேன். எனவே, இந்த விவகாரத்தில் இரகசியமாக எதையும் செய்ய மாட்டோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன் என கௌரவ பிரதமர் தெரிவித்தார்.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களுக்கு கோரோனா

கொரோனா தொற்றுக்கு இலக்கான தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 3% மாணவர்கள் அட்டாளைச்சேனை கொவிட் இடைதங்கல் முகாமில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

கொரோனா நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கடந்த 3 தினங்களாக கல்முனை பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்கள் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளான பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அட்டாளைச்சேனை கொவிட் இடைதங்கல் முகாமில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் திங்கட்கிழமை (22) மேற்கொள்ளப்பட்ட அன்டீஜன் கொரோனா பரிசோதனையின்போது பொத்துவில் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 11 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும் பல இடங்களிலும் தொற்று அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. கல்முனை பிராந்தியத்திலும் தடிமல் காய்ச்சல் பரவலாக காணப்படுவதாக தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

ஆகவே எமது பரிசோதனை நடவடிக்கையிலும் கட்டுப்பாட்டு செயற்பாட்டிலும் சற்று இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இலங்கையில் தற்போது கட்டுப்பாட்டு நிலைமை தளர்த்தப்பட்ட நிலையிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் பல இடங்களில் கொவிட் 19 தொற்று அதிகரித்த நிலைமையை காணமுடிகிறது. 10 தொடக்கம் 20 வீதம் வரையான கொவிட் தொற்று அதிகரித்து காணப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் இந்த நிலைமைகளை உணர்ந்தவர்களாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதும் சுகாதார பழக்கவழக்கங்களை மிக இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

பல இடங்களில் சுகாதார நடைமுறைகளை மீறி பொதுமக்கள் ஒன்றுகூடுவது தொடர்பாக முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

ரோக்கியமானது அல்ல என்பதை தெளிவு படுத்த விரும்புகின்றேன்.

அநேகமாக தொற்றுக்குள்ளானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களாவர். எவ்வாறாயினும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் ஊடாகவே இத்தொற்றுக்களில் இருந்து நாம் பாதுகாப்பு பெறமுடியும் என்றார்.

## குறிஞ்சாக்கேணி படகு விபத்து தௌபீகின் வீடு

**இந்நிலையில் படகு விபத்தின் பலி எண்ணிக்கை உயர்ந்ததை அடுத்து கிண்ணியாவில் பதற்ற நிலைமை தோன்றியிருந்தது.**

**இதனை தொடர்ந்து அப்பகுதியில் அமைந்துள்ள முஸ்லீம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தௌபீகின் வீட்டின் மீது பொதுமக்கள் ஆவேசத்துடன் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.**

**குறித்த சம்பவத்தை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் கடற்படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.**

## கிண்ணியாவில் பதட்டம்; மக்கள் திரண்டு

**எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.**

**குறிஞ்சாக் கேணிப் பகுதியில் ஆறு ஒன்றின் ஊடாக வழமைபோல மாணவர்களை ஏற்றிச் சென்றபோதே படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியிருந்தது.**

**சில நூறு மீற்றர்கள் தூரமேயான குறித்த ஆற்றுப் பயணத்தின்போது படகுப் பாதை கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளமை மக்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**படகுப் பாதை உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுவதால், படகுப் பாதைக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மோசடி இடம்பெற்றிருப்பதாக குற்றம்சாட்டியே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

**வீதிகளில் ரயர்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.**

**இதேவேளை,கிண்ணியா பிரதேச செயலத்தில் திரண்டுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் அரச அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.**

**கிண்ணியாவில் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.**

## படகு விபத்திற்கு காரணம் யார்?

**குறிஞ்சாக்கேணி பகுதியில் இடம்பெற்றுவரும் பாலத்தின் நிர்மாண பணிகள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலேயே ஆரம்பிக்கபட்டதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

**நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சிக்காரர்களின் உரைக்கு பதில் கருத்து தெரிவிக்கும்போதே இதனை குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் அவர் குறிப்பிடுகையில், கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு எங்களின் கவலையை தெரிவித்து கொள்கிறோம். இந்த விபத்தையும் அரசாங்கத்து தொடர்பிலும் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு முன்னவைக்க முயற்சிக்கிறார்கள். கிண்ணியா. குறிஞ்சாக்கேணி பகுதியில் இன்று படகு விபத்துக்குள்ளான பகுதியில் பால நிர்மாண பணிகள் இடம்பற்று வருகின்றன. இந்த பாலத்தின் நிர்மாணப்பணிகளுக்கு கடந்த நல்லாட்சி அரசாங்கமே அடிக்கல் நாட்டியுள்ளது. எந்தவொரு மதிப்பீடும் இல்லாமல், விலைமனு கோரமல் இந்த பாலத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது.**

**எங்களின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னரே மதிப்பீடு செய்யப்பட்டு விலைமானு கோரல் விடுக்கப்பட்டு பாலத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மக்களின் பாவனைக்கு விரைவாக பெற்று கொடுப்பதற்காகவே இந்த பாலத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது மக்களின் போக்குவரத்துக்காக மாற்று வீதியும் வழங்கப்பட்டது. அந்த வீதி 3 கிலோமீற்றர் தூரம் கொண்டுள்ளது. அதனால் அந்த பிரதேச மக்கள் அந்த வீதியை பயன்படுத்துவதற்கு விரும்புவதாக இல்லை. இதுவே எனக்கு அங்கிருந்து கிடைத்த தகவல்.**

**சம்பந்தப்பட்ட நகரே சபையினால் இந்த படகு சேவை வழங்கப்பட்டுள்ளது. அதனால் இந்த படகு சேவைக்கும் அரசாங்கத்துக்கும் நேரடி தொடர்பு எதுவும் இல்லை. விபத்துக்குள்ளான படகில் பயணித்த மாணவர்கள் பாதுகாப்பு ஆடைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும் அவர். சுட்டிக்காட்டினார்.**

**கடந்த 2021.10.28 ஆம் திகதியிடப்பட்ட கடிதமொன்றினூடாக கிண்ணியா0%, பெரியாற்றுமுனையை சேர்ந்த எம்.ஏ.எம். றியாஸ் என்பவருக்கு மூன்று நிபந்தனைங்களை முன்வைத்து கிண்ணியா நகர பிதா எஸ்.எச்.எம். நளீம் இந்த படகுச்சேவையை முன்னெடுக்க அனுமதி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

## அரசின் அசட்டையே விபத்துக்குக் காரணம்

**குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகு விபத்து தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் நேற்று சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.**

**இதன்போது, அரசின் அசட்டை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என ஹக்கீம் சுட்டிக்காட்டினார். மேலும், முறையான வகையில் அந்தப் படகு பாதை சேவை நடைபெறவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.**

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றியே கிண்ணியாவில் இந்தத் தரமற்ற தற்காலிக படகுப் பாதை இயங்கியுள்ளது எனவும், இது தொடர்பில் உடனடி விசாரணை வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.**

**இதேவேளை, கிண்ணியா படகு பாதை குறித்து பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவித்தார்.**

## முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்

**அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.**

**பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.**

**கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி, நிமல் லன்சா அந்தப் பகுதியில் பாலத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டிய போதும், அது தொடர்பான வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருந்ததாக சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.**

**இந்நிலையில், அங்கு மக்கள் பயணிப்பதற்கான படகுப் பாதை விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், அந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

**அதேபோன்று குறித்தப் படகுப் பாதை இயங்கிய முறை மற்றும் அதன் சட்டப்பூர்வ தன்மை ஆகியன குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தியுள்ளார்.**

## கிண்ணியாவை உலுக்கிய படகு விபத்து

**அத்துடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 மற்றும் 8 வயதுடைய சகோதரிகளும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இதன் காரணமாக, பீப்பாய்கள் மற்றும் பலகை என்பனவற்றைப் பயன்படுத்தி குறித்த மிதப்புப்பாலம் தயாரிக்கப்பட்டுள்ளது.**

**இந்த மிதப்பு பாலத்தின் இரு பகுதிகளும், கம்பிகளின் ஆதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.பாடசாலை மாணவர்கள் உட்பட பிரதேச மக்கள் தமது அன்றாட பயண நடவடிக்கைகளுக்குக் குறித்த மிதப்பு பாலத்தைப் பயன்படுத்துகின்றனர்.**

**இந்த நிலையில், நேற்று காலை இடம்பெற்ற பயணத்தின்போது, 7.30 அளவில் விபத்து இடம்பெற்றுள்ளது.இதன்போது குறித்த படகில் 30 பேரளவில் பயணித்திருந்ததாக காவல்துறை குறிப்பிட்டுள்ளது.**

**20 பேர் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், அவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.**

**மேலும் தெரியவருகையில்;**

**சம்பவம் நேரத்தில் குறித்த படகு பாதையில் 17 பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 23 பேர் பயணித்துள்ளதுடன், நீரில் மூழ்கிய சிலர் நீந்தி கரையைச் சேர்ந்துள்ளனர்.**

**இப்பகுதியில் பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதனால் கிண்ணியா குருஞ்சான்குளம் ஆகியவற்றுக்கிடையில் இந்த படகுப்பாதை சேவை தற்கலிகமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது**

**குறித்த படகில் பயணித்த மேலும் 17 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், 3 பேர் தீவிரச சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

**மேலும், பொதுமக்களுடன் பொலிஸார், கடற்படையினர் இணைந்து இவ் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.**

**சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் . இச்சம்பவமானது கிண்ணியா பிரதேசத்தை சோகத்தில் ஆழ்த்திய சம்பவமாகப் பதிவாகியுள்ளது.**

**குறித்த படகு விபத்தின் பலி எண்ணிக்கை உயர்ந்ததையடுத்து கிண்ணியாவில் பதற்ற நிலைமை ஏற்ட்டுள்ளது. அங்கு கிண்ணியா மக்கள் பிரதான வீதியில் டயர்களை எரித்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.**

**திருகோணமலைகிண்ணியா குறிஞ்சாங்கேணி பகுதியில் பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதால் மக்களுக்கான போக்குவரத்துக்காக குறித்த ஆற்றினைக் கடப்பதற்கு இழுவைப்படகினைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.**

**தினமும் இந்த இழுவைப்படகினூடாக நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பற்ற முறையில் பயணம் மேற்கொண்டு வந்த நிலையிலேயே இன்று காலை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இருப்பினும் உயிரிழந்த சிலரின் விபரம் திரட்டபட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டங்கள் தெரிவிக்கின்றன அதனடிப்படையில் சகு சஹீ (வயதுமூன்றரை),சஹிலா (வயது6),பரீஸ் பகி (வயது 6) ஷேஹப்துல் சாகர் எவ். சரீன் (வயது8) மற்றும் சப்ரியா (வயது 30) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களுள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்**

**மேலும் கிண்ணியா வைத்திய சாலை பிரதான வீதி மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் முன்பாக பொதுமக்கள் ஒன்று கூடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்**

**இவ்வாறு உயிரிழந்தவர்களின் உடலங்கள் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்படாமல் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும்**

**புதிதாக அமைக்கப்பட்ட குறிஞ்சாக்கேணி பலத்தை அமைப்பதத்திற்கு முன்னர் அதற்கான பாதுகாப்பான மாற்று வீதியினை அமைத்த பின்னரே புதிய பாலத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் இவ்வாறு இருக்கையில் இவ் புதிய பல நிர்மாணத்திட்கு அனுமதி வழங்கியது தொடர்பில் விசாரணை வேண்டுமெனவும்**

**திருகோணமலை மாவட்டத்தின் அதிக பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற கிண்ணியா பிரதேசத்தில் இவ்வாறான அசம்பாவிதம் இடம்பெற்றமைக்கு பிரதேச அரசியல் வாதிகளே பொறுப்பு கூற வேண்டும் எனவும் கிண்ணியா பிரதேசத்தில் வசிக்கும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன் இவ்விடத்திட்கு வருகைதர வேண்டுமெனவும் கோரி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது**

**மேலும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் அவர்களின் இல்லமும் ஆர்பாட்டக்காரர்களினால் முற்றுகையிட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.**

**மேலும் கிண்ணியா பிரதேசத்தில் பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிசாரினால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை வீசப்பட்டு வருவதுடன் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .**

# கிண்ணியா படகு விபத்தின் சோகக் காட்சிகள்...



# மைதானத்திற்கு குறுக்காக கார்ப்பட் வீதியா?

## வேண்டாம் என மக்கள் போர்க்கொடி: வீதி இடைநிறுத்தம்!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)





கல்முனை தமிழ்ப்பிரிவிலுள்ள மைதானத்தை கபளீகரம் செய்யும் நோக்கில் மைதானத்திற்கு குறுக்காக கார்ப்பட் வீதியமைக்க முயற்சி செய்வதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையென அங்குள்ள பொதுமக்களும் பொது அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

கல்முனைதொடக்கம் மருதமுனை வரை கடலோரமாக கார்ப்பட்வீதியமைக்கும் சிறப்பான பணியை பொதுஜனமுன்னணியின் அமைப்பாளர் றிஸ்லிமுஸ்தபா முன்னெடுத்துவருகிறார்.

இதன்போது, கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் இவ்வீதியமைக்கப்படும்போது அங்குள்ள ஒரேயொரு விளையாட்டுமைதானத்திற்கு குறுக்காக வீதியமையும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான முதல் கட்டவேலைகளும் நடைபெற்றுவருகின்றவேளையில் பொதுமக்களின் எதிர்ப்பலை தொடங்கியுள்ளது.

பொதுஜனமுன்னணியின் அமைப்பாளர் றிஸ்லிமுஸ்தபா முதன்முதலாக இத்திட்டம் பற்றி கலந்துரையாடிய கூட்டத்தில் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் மைதானத்திற்கு பாதகமில்லாதவகையில் வீதியமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். மைதானத்திற்கு பாதிப்பில்லாத வகையில் மைதானத்திற்கு கிழக்காக வீதியை அமைக்குமாறு பொதுநல அமைப்புகள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், சைனிங் விளையாட்டுக்கழக்கத்தினர் ,பொதுமக்கள் என பலதரப்பினரும் வேண்டுகோள்விடுத்து எதிர்ப்பை பலகூட்டங்களிலும் தெரிவித்திருந்தனர். எனினும் வீதிஅபிவிருத்தி அதிகாரசபை அதற்கான திட்டமிடலின் போது குறித்தவீதி மைதானத்திற்கு குறுக்காக வரும்வகையில் திட்டமிட்டிருந்தனர். இதனையறிந்த பொதுஅமைப்புகள் தமது எதிர்ப்புகளை பல தடவைகள் தெரிவித்துவந்தனர்.

இறுதியாக, வீதிஅபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள் கடந்தவாரம் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ,சைனிங் விளையாட்டுக்கழகத்தினர், பொதுமக்களெல்லாம் சேர்ந்து மைதானத்தில் ஒரு சந்திப்பை நடாத்தியிருந்தனர்.

அங்கு மக்கள் 'மைதானத்திற்கு குறுக்காக வீதி என்றால் எமக்கு வீதி தேவையில்லை. மைதானத்தை தவிர்த்து போடுவதானால்போடுங்கள். என்று தமது குரலை எழுப்பினர். பதிலுக்கு, வீதிஅபிவிருத்தி அதிகாரசபையினர் பழையவீதி செல்லும் தடத்திலேதான் பாதை அமைக்க முடியும் அதேவேளை கடலுக்கு அருகாமையில்அமைக்கமுடியாது என்று கூறினர்.

பாண்டிருப்பு ,கல்முனை போன்ற பல இடங்களில் இதனைவிட குறைவான கடல்தூரமுள்ள கடலரிப்பு அதிகமுள்ள இடங்களில் பாதை அமைக்கப்பட்டுகிறதே,: அதுமட்டுமல்ல கல்முனை முகாமிற்குபின்புறம் கடலோரமாக புதியபாதை அமைக்கப்படுகிறதே அவையெல்லாம் உங்கள் திட்டமிடலில் இல்லையா? என கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் பொறியியலாளரிடம் கேள்வியெழுப்பினார்.

எனினும் வீ.அ.அ.சபையினர் தமது பிடியில் விடாப்பிடியாக இருந்தகாரணத்தினால் அந்தப்பகுதியில் மாத்திரம் தற்சமயம் வீதியமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் இதுவிடயம் பற்றிக்கூறுகையில்:

கல்முனை 1ஆம், 2ஆம், 3ஆம் பிரிவுகளுக்கான ஒரேயொரு விளையாட்டுமைதானம் இது. சுனாமிக்கு முன்னர் கல்முனை மாமாங்க வித்தியாலயமும் அதன் மைதானமும் அமைந்திருந்த பிரதேசம் இது.கடற்கரையருகே அமைந்திருந்த காரணத்தினால் சுனாமியினால் பாடசாலை முற்றாக சேதமடைந்து பிறிதொரு இடத்தில் அமைக்கப்பட்டு பாடசாலை இயங்கிவருகிறது. பாதிக்கப்பட்ட மைதானத்தை, சைனிங் விளையாட்டுக்கழகத்தினர் பொறுப்பெடுத்து புனரமைத்து இன்று இளைஞர்கள் பொழுதுபோக்கிற்கு விளையாடும் களமாகவுள்ளது.இதனை வீதிக்காக விட்டுக்கொடுக்கமுடியாது.இளைஞர்கள் விளையாடாமல், போதை வஸ்துவிற்கு அடிமையாகி,முழுச்சமுகமும் குட்டிச்சுவராகவேண்டும் என்று எண்ணுகிறார்கள் போல. அதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

இன்றைய இளைஞர்களினதும் நாளையசந்ததியினரினதும் பழிச்சொல்லை இவ்வட்டாரப்பிரதிநிதி என்றவகையில் நான் சுமக்கவேண்டிவரும்.வீதி இல்லாவிட்டாலும் பரவாயில்லை இருக்கின்ற ஒரேயொரு மைதானத்தை ஒருபோதும் இழக்கமுடியாது.என்றார்.

## முஸ்லிம் ஆன்மீகத் தலைவர் தைக்கா அஹமத் நஸீம் பிரதமர் சந்திப்பு



(வாஸ் கூஞ்ஞ)

தென்னிந்திய முஸ்லிம் ஆன்மீகத் தலைவர் அஷ் ஷெயிக் கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம் அவர்கள் திங்கள்கிழமை (22.11.2021) முற்பகல் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் சந்தித்தார்.

அவர் காலஞ்சென்ற இந்திய முஸ்லிம் ஆன்மீகத் தலைவரான அஷ் ஷெயிக் கலாநிதி தைக்கா சுஹாய்ப் அலீம் அவர்களின் புதல்வராவார்.

மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய பணிகள் குறித்து இச் சந்திப்பின் போது கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம் அவர்கள் கௌரவ பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம் அவர்கள், இந்நாட்டின் மஹாசங்கத்தினர் மற்றும் இஸ்லாம் மத குருமார்கள் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

குறித்த சந்திப்பின் போது கலாநிதி அக்ரஹெர கஸ்ஸப தேரர் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம் அவர்களுடன் வருகைத்தந்திருந்த முஸ்லிம் மதத் தலைவர்களும் கௌரவ பிரதமருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## துரோகிகளை தூக்கி வீசிய மக்கள் காங்கிரஸ் தலைவரின் செயற்பாட்டை மனதார மேச்சுகிறேன்

### காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் முஸ்தபா ஜலீல்

(மாளிகைக்காடு நிருபர்)



கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அரசின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அதியுயர்பீடத்தின் முடிவை தனது சொந்த நலனுக்காக உதாசீனப்படுத்தி தான்தோன்றித்தனமாக முடிவெடுத்து வரவுசெலவுத் திட்டத்திற்கு ஆதரவாக கையூயர்த்தி சொல்லொன்னாத் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் மக்கள் காங்கிரசின் தலைமைக்கும் மேலும் மேலும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான முஷரப் முதுனபின், இசாக் ரஹ்மான், மற்றும் அலிசப்ரி றஹீம் ஆகியோரை வண்மையாக கண்டிக்கிறேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பிலான காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் முஸ்தபா ஜலீல் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும், நயவஞ்சகத்தனமான செயற்பாட்டைச் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியின் அனைத்துப் பதவிகளில் இருந்து இடைநிறுத்திய செயற்பாட்டை பாராட்டுவதோடு சொல்லன்னா பல துயரங்கள், துன்பங்களை இந்த அரசாங்கம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு விடுக்கும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் திடகாத்திரமான முடிவை எடுத்து வரவுசெலவு திட்டத்தை எதிர்த்து வாக்களித்த தலைவருக்கு என்றென்றும் நம்பிக்கையாகவும் விசுவாசமாக இருக்க தவறிய அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஏனையே பிரதேசங்களில் உள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் நாட்டில் உள்ள ஏனைய அனைத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களையும் இணைத்து அவர்களுக்கு எதிராக மாபெரும் கண்டன மசோதாவை நிறைவேற்ற எண்ணியுள்ளேன்.

இந்த முனாபிக் தனமான செயற்பாட்டால் மனமுடைந்து காணப்படும் கட்சி ஆதரவாளர்கள் விழித்தெழுங்கள். இவ்வாறானவர்கள் இனி எந்த அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடாத வகையில் அவர்களை சமூகத்திலிருந்து விரட்டி அடித்து நற்பண்புள்ள நல்லொழுக்க அரசியல் கலாச்சாரமுல்ல அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## அரச வானொலி விருது விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு நான்கு விருதுகள்

(எம்.ஏ.றமீஸ்)



இலங்கையின் வானொலி ஊடகத்துறையில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அரச வானொலி விருது விழா2021 கடந்த திங்கட்கிழமை(22) பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதற்கமைவாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு நான்கு அறிவிப்பாளர்கள் விருதினைப் பெற்றுக் கொண்டனர். சிரேஷ்ட அறிவிப்பாளர்களான கலிஸ்ரா லூக்கஸ், நாகபூஷணி கருப்பையா மற்றும் பிறை எப்.எம்.வானொலி சேவை நிலையத்தில் கடமையாற்றி வரும் அறிவிப்பாளர் எம்.ஏ.றமீஸ், ஜே.வஹாப்தீன் ஆகியோர் இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த வானொலி நாடக நடிக்கைகாக அறிவிப்பாளர் கலிஸ்ரா லூக்கஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த வானொலி பெண் அறிவிப்பாளராக நாகபூஷணி கருப்பையாவும், சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சிக்காக அறிவிப்பாளர், ஆசிரியர் மற்றும் ஊடகவியலாளர் எம்.ஏ.றமீஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், வானொலி சிறந்த நாடகப் பிரதியாளருக்காக ஆசிரியர் அறிவிப்பாளர் ஜே.வாஹாப்தீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறு தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மாந்தை மேற்கில் மதத்தலைவர்கள், தோண்டர்களுக்கு மருத்துவ முகாம்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் மதத்தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கு நடாத்தப்பட்ட மருத்துவ முகாமில் பலர் கலந்து கொண்டு பலன் அடைந்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நெறிப்படுத்தலில் மன்னார் மாவட்ட செயலாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் சர்வமத தலைவர்களுக்கும் வழிபாட்டு தலங்களில் கடமையாற்றும் தொண்டர்களுக்குமான இலவச மருத்துவ முகாம் திங்கள் கிழமை (22.11.2021)) காலை 8 மணி தொடக்கம் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது

குறித்த மருத்துவ முகாமில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் சர்வ மதத் தலைவர் மதத்தலைவர்களும் ஆலயங்களில் பணிபுரியும் தொண்டர்களும் மருத்துவ சேவையினை பெற்றுக் கொண்டார்கள்.

## கல்முனை மக்கள் வங்கியில் நவீன ஏ.ரி.எம். திறப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)



கல்முனை மக்கள் வங்கிக் கிளையில் நவீனமயப்படுத்தப்பட்ட தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை நிலையம் (ATM) நேற்று செவ்வாய்க்கிழமை (23) கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கிளை முகாமையாளர் ஏ.எல். அப்துஸ் ஸலாம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலய பிரதிப் பொது முகாமையாளர் ஜே.யூ.ஏ.அன்ஸார், அம்பாறை பிராந்திய முகாமையாளர் எச்.டி.குணரத்தின ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்தனர்.

இந்த நவீனமயப்படுத்தப்பட்ட தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை நிலையத்தில் பணம் மற்றும் காசோலை வைப்பிடலுக்கும் பணம் மீளப் பெறலுக்குமென தனித்தனி இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை, தற்போது தனியார்கட்டிடமொன்றில் இயங்கி வருகின்ற கல்முனை மக்கள் வங்கிக் கிளைக்கான நிரந்தரக் கட்டிடத்தை அதற்குரிய சொந்த நிலத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இதன்போது அதிதிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் உத்தியோகத்தர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss

info@srijewellery.ch

Sikaram

துரிதபணமாற்றுச்சேவை

Sikaram INTL Gmbh

Heinrich Strasse 120, 8005 Zürich Tel : 044 2410241

sikaramgmbh@gmail.com / www.sikaram.com Fax : 044 2410245

Prasath Coiffeur

Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00

Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch

Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

மாணிக்கப்போடி அறக்கட்டளை

REG.NO : TR/I/71

MANIKKAPODY TRUST

MUNAIKKADU, KOKKADDICHOLAI

முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய

Online Tech Network

நிறுவனத்தில்

ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு

MANOJ MASTER

Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

Seela Food Gastro AG

044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch

Züricherstrasse 15
8400 Winterthur.

Allegrotto Pizza Kurier

Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT




# இணையவழி குற்றங்களை புரிந்து கொள்ளலும், பதின்ம வயதினர் எதிர்நோக்கும் சவால்களும் விடே விழிப்புணர்வு நிகழ்ச்சி

(மாளிகைக்காடு நிருபர்)

இணையத்தளத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளல் இணையத்தளம் பிள்ளைகளின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை வளர்ப்பதற்குக் காரணமாகின்ற போதிலும் பிள்ளைகள் இணையத் தளத்தைப் பயன்படுத்தும் போது அதில் உலாவரும் துஷ்பிரயோகம் செய்வோரின் பிடியில் சிக்குகின்றமை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றமை துரதிஷ்டவசமான சம்பவங்களின் மூலம் தெரிய வருகின்றது. எனும் கருப்பொருளின் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி இறக்காமம் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சபறுல் ஹஸீனாவின் ஏற்பாட்டில் இறக்காமம் சது/அல் - அஷ்ரப் தேசிய பாடசாலையில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச். வஹாப் பிரதம வளவாளராக பங்கேற்று விஷேட விழிப்புணர்வு அமர்வை நடத்தி வைத்தார். முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.இம்டாட், பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எஸ். றிஸ்மியா ஜஹான் ஆகியோர் கலந்து கொண்டதோடு பாதுகாப்பான இணையப் பாவனையும் மாணவர்களின் வகிபாகமும் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வை நடத்தினர்.



நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் மாணவர்கள், பெற்றோர் மற்றும் முதியவர்களான சமுதாயத்தினருக்கு தனித்தனியாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடாத்தி வருகின்றது. அதற்கமைய இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் இந்நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சௌபாக்கிய உற்பத்தி கிராமம் ; 20 பயனாளிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான ஆடுகள் வழங்கி வைப்பு



(நூருல் ஹுதா உமர்)

வரிய குடும்பங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேசசெயலக பிரிவில் இசங்கணிச்சீமை வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சௌபாக்கிய உற்பத்தி கிராமம் எனும் தொனிப்பொருளில் 20 பயனாளிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான ஆடுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி எம் அன்சாரின் வழிகாட்டலில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ எல் எம் இர்பானின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ரீ எம் ஐய்யூப் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எம் தமீம், ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஐ கே சுலைமாலெப்பை, சௌபாக்கியா திட்டத்தின் தலைவர் எம் எம் சுலைமாலெப்பை, அல் சபா சனசமூக அமைப்பின் தலைவர் ஆர் எம் சியாம் உட்பட பலரும் கலந்துகொண்டு அரசாங்கத்தின் வாழ்வாதாரத்திட்டத்தை மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

# 39 வருட சேவை நலன் பாராட்டு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

திருமதி மலர்விழி சுப்பிரமணியம் 21.11.2021 தனது 39 வருட ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.21.11. 1961 கதிரேசன் சரஸ்வதி தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வியாக கந்தபளையில் பிறந்த இவர் தனது ஆரம்ப கல்வியை கந்தபளை மெதடிஸட் கல்லூரியிலும் பின்னர் நுவரெலியா நல்லாயன் கல்லூரி ட மற்றும் கண்டி நல்லாயன் கல்லூரியிலும் கல்வி கற்றார். 11.4.1982 விஞ்ஞான, கணித பாட ஆசிரியராக இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் (தற்போது இராகலை உயர் பாடசாலை) தனது ஆசிரியர் தொழிலை ஆரம்பித்த இவர் பின்னர் கந்தபளை மெதடிஸ்கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றினார். 1985ம் ஆண்டு முதல் 2002ம் ஆண்டு வரை பார்க் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி அதன் பின்னர் கந்தபளை மெதடிஸட் கல்லூரியில் பிரதி அதிபராகவும் பின்னர் அதிபராகவும் 2007ம் ஆண்டு வரை கடமையாற்றினார். 2007ம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்ட இவர் நுவரெலியா கல்வி வலயத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றார். சிறிது காலத்தின் பின்னர் நுவரெலியா வலயத்தின் திட்டமிடல் பிரிவுக்கு பொறுப்பான உதவி கல்வி பணிப்பாளராக பொறுப்பேற்று தான் ஓய்வு பெறும் வரை தனது கடமைகளை மிக சிறப்பாக செயற்படுத்தினார். மத்திய மாகாணத்திலுள்ள மிக சிரேஸ்ட திட்டமிடல் பிரிவு கல்வி பணிப்பாளராகவும் கல்வி திட்டமிடல் துறையில் மிகச் சிறந்த வளவாளராகவும் தான் ஓய்வு பெறும் வரை மிக சிறப்பாகவும் துடிப்புடனும் செயற்பட்டார். மிகச்சிறந்த விஞ்ஞான பாடம் மற்றும் கணித பாட ஆசிரியராகவும் கடமையாற்றிய திருமதி ம.சுப்பிரமணியம் தன்னிடம் கற்ற பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களில் சித்தி பெறுவதற்கு காரணமாய் இருந்துள்ளார். பார்க் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றியபோது பல மாணவர்கள் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உறுதுணையாக இருந்துள்ளார். இவருடைய குடும்ப வாழ்க்கையை பொறுத்த வரையில் முன்னால் வலப்பனை கோட்டகல்வி பணிப்பாளர் சின்னையா சுப்பிரமணியம்



என்பவரை மணந்ததுடன் மூன்று பிள்ளைகளின் தாயுமாவார். இவர் சமூகத்திற்கு செய்த அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த சன்மானமாக இவரது பிள்ளைகள் அவுஸ்திரேலியா மற்றும் மாலைத்தீவு போன்ற நாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர். இவரின் ஓய்வு காலம் சிறப்பாகவும் தேக ஆரோக்கியம் மிக்கதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய நுவரெலிய வலய கல்வி பணிப்பாளர், பிரதி கல்வி பணிப்பாளர், மேலதிக கல்வி பணிப்பாளர் மற்றும் உதவி கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

# கிழக்கில் பாடசாலைகளில் பழுதடைந்த கணணிகளை திருத்தும் வேலைத்திட்டம்!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குமாகாண பாடசாலைகளில் நீண்டகாலமாக பழுதடைந்துகிடக்கும் கணணிகளை திருத்தும் பாரிய வேலைத்திட்டம் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கந்தளாய் மற்றும் திருகோணமலை வடக்கு கல்வி வலயங்களில் பழுதடைந்த கணிணிகள் திருத்தம் செய்யப்பட்ட மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

மாகாண கல்வியமைச்சினதும் மாகாண கல்வித்திணைக்களத்தினதும் கணிணிப்பிரிவின் துறைசார் வல்லுனர்கள் இத்திருத்தவேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேபோன்று ஏனைய வலயங்களிலும் படிப்படியாக அந்தந்த வலயகணணி வளநிலையங்களுக்கு பழுதடைந்த கணணிகளை வரவழைத்து இத்திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெரும்பாலான பாடசாலைகளில் நீண்டகாலமாக நூற்றுக்கணக்கான கணிணிகள் பழுதடைந்து பாவிக்கமுடியாமல் தேங்கிக்கிடந்தன. இதனைக்கண்ணுற்ற மாகாணகல்விப்பணிப்பாளர் இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்குடா ஜனாஸா நலன்புரி மற்றும் சமூக சேவைகள் அமைப்புக்கு புதிய நிர்வாகம் தெரிவு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கல்குடா ஜனாஸா நலன்புரி மற்றும் சமூக சேவைகள் அமைப்புக்கு புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யும் பொதுக் கூட்டம் கடந்த (12) ஆம் திகதி மீராவோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். ஜெயசேகர் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எச். எம். கஸ்ஸாலி ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற குறித்த பொதுச்சபைக் கூட்டத்தில் பத்தொன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில், தலைவராக எம்.ஐ.அப்துல் அஸீஸ், உப தலைவராக ஏ.எல். நௌபர், செயலாளராக எம்.ஐ. மாஜிதீன், உப செயலாளராக எஸ்.எல். அனீஸ், பொருளாளராக எம்.எஸ். எம். றிபான் ஆகியோர்களுடன், உறுப்பினர்களாக, எம்.எஸ்.எம். பசீர், எம்.ஐ.எம். ஸப்ஷாத், எம்.ஏ.சி. இர்ஸாத், எஸ்.எம். றஹீம், ஐ.எம். றிக்காஸ், எஸ்.எல்.எம். முஸ்தபா (ஹாமி), எஸ்.ஐ. நிஜாம்தீன், எச்.எம்.எம். இத்ரீஸ், எம்.எம்.ஏ. காதிர், ஏ.எல்.எம். சதாம், எச்.எம்.ஸாஜித், கே. பௌஸ்தீன், எம்.ஏ. உசனார், எம்.எல். இஸ்மாயில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு கொங்கிறீட்வீதி

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)



ஜனாதிபதியின் 1லட்சம் கிலோமீற்றர் வீதிஅபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ், வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்திற்கு செல்லும் வீதி கொங்கிறீட் வீதியாக புனர்நிருமாணம் செய்யப்படவிருக்கின்றது.

நீண்டகாலமாக இவ்வீதி புனரமைக்கப்படாமல் தூர்ந்துபோய் போக்குவரத்திற்கு பொருத்தமில்லாததாக இருந்தது. அவ்வீதியை, ஜனாதிபதியின் 1லட்சம் கிலோமீற்றர் வீதிஅபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் புனரமைக்க ஏற்பாடாகியுள்ளது.



அதற்கான அளவை மதிப்பீட்டுவேலைகள் நேற்று அங்கு ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் முன்னிலையில் நடைபெற்றது. வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் கல்முனைப்பிராந்திய சிரேஸ்ட தொழினுட்ப உத்தியோகத்தர் எ.எம்.ஜௌபர் மதிப்பீட்டுவேலைகளை மேற்கொண்டார்.

நாவிதன்வெளி பிரதேசசபை உறுப்பினர் ரி.யோகநாயகன், திருக்கோவில் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.அரியநாயகம் ஆகியோர் மேற்கொண்ட திவீரமுயற்சியின் காரணமாக சுமார் ஒன்றரை கிலோமீற்றர் வீதி ஆலயத்திற்காக கொங்கிறீட் வீதியாக போடப்படவிருக்கின்றது.

ஆலய பரிபாலனசபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, உபதலைவர் எஸ்.கமலேஸ்வரன், நிருவாகசபை உறுப்பினர்களான இ.அரியநாயகம், எஸ்.சசிகரன் உள்ளிட்டோரும் சமுகமளித்திருந்தனர்.

இவ்வீதி புனரமைக்கப்பட்டதும் சகல வாகனங்களும் பயணிக்கமுடியுமென்றும் பக்தர்கள் பயமின்றி சுதந்திரமாக ஆலயத்தை தரிசிக்கமுடியுமெனவும் ஆலய செயலாளர் த.சண்முகநாதன் தெரிவித்தார்.

# மூடப்பட்டிருந்த அறநெறிப்பாடசாலைகள் மீண்டும் 28 இல் ஆரம்பம்

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் அறிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கொரோனா பேரிடர் காரணமாக மூடப்பட்டிருந்த நாட்டிலுள்ள அறநெறிப்பாடசாலைகளை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் சுகாதாரநெறிமுறைக்கிணங்க மீளத்திறக்குமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அறநெறிப்பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு வசதியாக பெற்றோர் அறநெறிப்பாடசாலை நிருவாகத்தினர் பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்புவழங்கவேண்டும்.

உரிய சுகாதர நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றவேண்டும். எனவே இதுவிடயத்தில் சகலரும் கவனம்செலுத்துமாறும் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.







(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொட்டகலை வீ டீச்சர் அமைப்பின் ஏற்பாட்டில் கொட்டகலை பிரதேசத்தில் 25 வருடகால ஆசிரிய சேவையை பூர்த்திசெய்த ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வு கொட்டகலை ஷஸ்மிக்கா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இப்பிரதேசத்தில் 25 வருடகால ஆசிரிய சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.இதன்போது பிரதம அதிதியாக நுவரெலிய கல்வி வலயத்தின் கோட்டம் இரண்டின்டிற்கான கோட்டக்கல்வி பணிப்பாளர் ஜெகதீஸ்வரன், கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் முன்னால் அதிபர் த ஜெயக்குமார், பீஷ்கோர் நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் நோயல்சில்வஸ்டர், சீடா வள நிலையத்தின் இணைப்பாளர் பரமஜோதி ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு



(சர்ஜுன் லாபீர்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் அவர்கள் செய்துவரும் சுயதொழில் முயற்சிகளை பொருளாதார ரீதியாகஊக்கிவித்து மேலும் வலுவூட்டுவதன் மூலம் நிலைபேறான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இவ்வாழ்வாதார உதவி வழங்கும் இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் நிலைபேறான வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விதவைகள் மற்றும் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களை வலுவூட்டல் எனும் கருப்பொருளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் சுயதொழில்களை வலுவூட்டி வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கும் ஆரம்ப நிகழ்வு பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.சி.எம். ரஷ்ஷான் (நளீமி) அவர்களின் தலைமையில் பிரதேச செயலக கூட்டமண்டபத்தில் 2021.11.23 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதீதியாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. ஜகதீஷ்வரன் அவர்கள் கலந்துசிறப்பித்தார்.

விஷேட அதீதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் அவர்களும், Islamic Relief நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஐ.ஸப்ரி, சிரேஷ்ட மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர் எம்.எம். இப்னு யாஸீர் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மேலும் பிரதேச செயலக கிராம சேவக நிருவாக உத்தியோகத்தர் எச்.பி.யசரட்ன,மாவட்ட அரச சார்பற்ற நிறுனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.இர்பான், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சுரேக்கா உட்பட கிராம சேவை உத்தியோகத்தர்களான ஏ.சி.எம்.சமீர், எம்.ஜே.எம். அத்தீக் ஆகியோரும் நிகழ்வில் கலந்துசிறப்பித்தனர்.

பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி எஸ். சபறுல் ஹஷீனா, உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.இம்டாட் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி எஸ். றிஸ்மியா ஜஹான் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இஸ்லாமிக் ரிலீப் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.எஸ். சுபுஹான், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி ஜி.சுகீர்தனி ஆகியோரும் கலந்துகொண்டதோடு நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்து நடாத்திவைத்தனர்.

இவ்வேலைத்திட்டத்தின் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக தையல் இயந்திரங்களும் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட உதவித் தொகைக்கான காசோலைகளும் வழங்கிவைக்கப்பட்டது.

# முன்னாள் அமைச்சர் ரிசாட்டின் நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் பாவனைக்கு கையளிப்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீனின் நிதியொதுக்கீட்டில், கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

அந்தவகையில், கடந்த வியாழக்கிழமை, கண்டி (18) மாவட்டத்துக்கு விஜயம் செய்த முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், கண்டி, அக்குரனை, தெழும்புகஹவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர்பூங்காமற்றும் கண்டி, நீரல்ல முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் உடுநுவர, ஹந்தெஸ்ஸ கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிகிச்சைநிலையக்கட்டிடம் ஆகியவற்றை மக்கள்பாவனைக்கு கையளித்தார். அத்துடன், கண்டி, உடுநுவர, அல்/மனார் தேசிய பாடசாலையில் 2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்ற மாணவர்கள் மற்றும் 2019-2020 ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்விழும் அதிதியாக ரிஷாட் எம்.பி கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுகளில், மக்கள் காங்கிரஸின் கண்டி மாவட்ட அமைப்பாளர் ஹம்ஜாட் ஹாஜியார் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத மணல் அகழ்விற்கு எதிராக வெருகல் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)








திருகோணமலை வெருகல் பிரதேசத்தில் சட்ட விரோத மணல் அகழ்விற்க்கு எதிராக பொதுமக்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று (22) திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டம் வெருகல் மாவடிச்சேனை நாதனோடை பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வதாகவும் கடந்த ஏழு மாதத்தில் நாட்டில் 1300 மணல் அகழ்விற்காக அனுமதி பத்திரம் வழங்க பட்டுள்ளதாகவும் அவற்றில் 80 அனுமதிப்பத்திரம் வெருகல் பிரதேசத்தில் மணல் அகழ்விற்காக வழங்க பட்டுள்ளதாகவும் பிரதேசத்தின் அதைவிட அதிகமாக சட்டவிரோத மணல் அகழ்வுகளும் இடம்பெறுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் எதிர்கால சந்ததிக்கு நீ விட்டுச்செல்லும் ஒரே சொத்து மண், கிளஸ்க்கோ மாநாட்டில் ஏற்றுக்கொண்ட உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்து, அற்ப பணத்திற்கு மண்ணை அடமானம் வைக்காதே, கோடீஸ்வரர்கள் வயிறு வளர்க்க ஏழைகள் எமது வயிற்றில் அடிக்காதே, எங்கள் மண் எமக்கான உரிமை மற்றும் இன்று பணமாக்க இருக்கும் மண் நாளை உன் பிணத்தை அடக்கம் செய்ய இருக்காது என்ற பதாதைகளை ஏந்தியவண்ணம் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியதோடு இவ்வாறு சட்டவிரோதமாக அகலப்படும் மணல் வெளிமாவட்டங்களுக்கு மாற்றுமன்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதாக கோஷமிட்ட பொதுமக்கள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு நடைபெறும் பிரதேச வழங்களை சூறையாடும் செயற்ப்பாடுகளுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு இச் செயற்ப்பாட்டை தடுக்காவிட்டால் பொதுமக்களை ஒன்று திரட்டி பிரதான வீதினை மறித்து பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்க நேரிடும் என்றும் எமது மண்ணை பாதுகாத்து தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேலும் வெருகல் பிரதேச செயலகத்தில் இவ் சட்டவிரோத மணல் அகழ்விற்க்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களை ரத்து செய்யுமாறும் வலியுறுத்தி பொதுமக்களினால் மகஜர் ஒன்றும் கையாளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

## கல்முனையில் அரச ஊழியர்களை தெளிவூட்டும் பயிற்சி செயலமர்வு




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனைப் பிராந்தியத்தில் கடமையாற்றும் அரச சேவையில் ஈடுபட்டு வரும் அதிகாரிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்கள், மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள், எதிர்காலத்தில் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வு இன்று(23) சேனைக்குடியிருப்பு விதாதா வள மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜெ. அதிசயராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு டெப் லின்ங் (DEAF LINK) நிறுவனம் அனுசரணை வழங்கியது.

இதில் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடாதிபதியும் உளவியல் மற்றும் தத்துவவியல் சிரேஷ்ட விரிவுரையாளருமான எம். ரவி வளவாளராக கலந்துகொண்டு அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார பிரிவு



உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் என பலர் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி செயலமர்வில் DEAF LINK நிறுவனத்தின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ரி. இளையராஜா, அம்பாறை இணைப்பாளர் இ.ரோஷான் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி மற்றும் பயிற்சி துறையினை அபிவிருத்தி செய்வதற்கான இணைப்புக்குழுக் கூட்டம்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

திறன்கள் அபிவிருத்தி, தொலைக்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தக்க இராஜாங்க அமைச்சினால் மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள தொழிநுட்ப மற்றும் தொலைக்கல்வி மற்றும் பயிற்சி (TVET) செயல்பாடு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் இன்று (23) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தல் குறிப்பிடப்பட்டகமைவாக தொழிநுட்ப அடிப்படையிலான சமுகத்தைக் கொண்ட சிறந்த நாட்டை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளில் மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள தொழிநுட்ப மற்றும் தொலைக்கல்வி மற்றும் பயிற்சி செயல்பாடு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவினூடாக பல்வேறு பங்குதாரர்களின் ஒத்துழைப்பின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைக்கு திறமையான நபர்களை உருவாக்கி மாவட்டத்தில் வேலையின்மையைக் குறைத்தல் இதன் நோக்கமாகும்.

அரசாங்க அதிபர் கருணாகரனின் தலைமையில் இடம்பெற்ற இவ்வொருங்கிணைப்புக் குழுவின்கீழ் 7 உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன. பாடசாலை உபகுழு, கைத்தொழில்துறை உபகுழு, தொழிநுட்ப மற்றும் தொலைக்கல்வி மற்றும் பயிற்சி அபிவிருத்தி உபகுழு, பகுத்தறிவு உபகுழு, தொழில் முனைவு அபிவிருத்தி உபகுழு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தை உபகுழு, தொழில் வழிகாட்டல் உபகுழு என்பன இவற்றில் உள்ளடங்குகின்றன.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பங்களிப்புடன் பிரதேச செயலகங்கள், தொழிநுட்பக்கல்லூரிகள், தொழில் கல்வி அதிகார சபை, தேசிய பயிற்சி மற்றும் தொழிற்துறை பயிற்சி ஆணையகம், ஓசியன் யூனிவசிடி, வலயக்கல்வி அலுவலகங்கள் என்பன இதன் பங்குதாரர்களாக செயற்படுகின்றனர்.

இவ்வொருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின்போது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் இரவீந்திர சமரவீர, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், உட்பட பிரதேச செயலாளர்கள், பங்குதார அமைப்புக்களின் உயர் அதிகாரிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# மட்டக்களப்பில் 6000 கறுவா மற்றும் கமுகு மரக்கன்றுகள் வழங்கி வைப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



சிறிய அளவிலான பயிர்ச் செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு விவசாயிகளுக்கு கறுவா மற்றும் கமுகு மரக்கண்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் சிறிய அளவிலான பயிர்ச் செய்கை ஊக்குவிப்பபுத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு விவசாயிகளுக்கு முதல் தடவையாக 50 கமுகு மற்றும் 100 கறுவா மரக்கண்றுகள் என்ற அடிப்படையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பரீட்சாத்தமாக முதல் தடவையாக மயிலம்பாவெளி பிரதேசத்தில் கறுவா மரக்கண்றுகளும், களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் கமுகு நாற்றுமேடைகள் உருவாக்கப்பட்டு தலா 3000 கண்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதி வவிசாயத் திணைக்களத்தினால் நாற்றுமேடை உற்பத்தியாளர்களிடமிருந்து கமுகு மரக்கண்றுகள் 13 ரூபாவிற்கும், கறுவாய் மரக்கண்றுகள் 18 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மரக்கண்றுகளே மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு 200 கமுகு மரக்கண்றுகளும், 200 கறுவா மரக்கண்றுகளும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்தின் வேண்டுகோளின் பேரில் இன்று (22) மாவட்ட செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

ஏற்றுமதி வவிசாயத் திணைக்களத்தின் விவரிவாக்கல் உத்தியோகத்தர் நர்தனா குகதாசனின் ஏறட்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் சீ. தனிநாயகம், அபிவிருத்தி உத்தியோகத்தர் கேம சந்திகா உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதுதவிர இம்மாவட்ட விவசாயிகளுக்கு இரத்தினபுரி மற்றும் கண்டி மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட கொறுக்காய் மரக்கண்றுகள் ஒருவருக்கு 10 என்ற அடிப்படையில் 1500 மரக்கண்றுகள் முதல் தடவையாக பரீட்சாத்தமாக பயிரிட வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லாட்சியரசு இல்லாத காலத்திலும் மாவீரர் தினம் செய்தோம்!

## மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

(இ.சுதாகரன்)

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 27 ஆம் திகதி துயிலும் இல்லங்களுக்கு சென்று விளக்கேற்றும் நடைமுறைகளை இக்கட்டான காலத்திலும், நல்லாட்சியரசு இல்லாத காலத்திலும் செய்தோம். ஆனால் கடந்த வருடம் 2020, கார்த்திகை 27, ஆம் திகதியிலிருந்து செய்ய முடியாத நிலை எமக்கு ஏற்பட்டது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மாவீரர் நாள் நடத்துவதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவு வழங்கப்பட்டமை தொடர்பாக மேலும் கருத்துக் கூறுகையில்,

முள்ளிவாய்க்கால் மௌனம் 2009 மே 18, ஏற்பட்டதற்கு பின்னரான காலத்தில் 2010, மே18 ல் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே முதலாவது முள்ளிவாய்க்கால் தினத்தை கூட்டமைப்பு சார்பாக நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது என்னுடன் சக பாராளுமன்ற உறுப்பினர்களாக அப்போது இருந்த பொ.செல்வராசா, சீ.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் பலத்த அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு மட்டு. கொக்கட்டிச்சோலை 'தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் மாமாங்கப்பிள்ளையார் கோயிலிலும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தோம்.

2011,ஆம் ஆண்டு மே 18 இல் முள்ளிவாய்க்கால் இரண்டாவது ஆண்டு' நினைவுதினம் வடக்கு கிழக்கிலுள்ள பல மாவட்டங்களிலும் இடம்பெற்றது என்பதே உண்மை வரலாறு. 2010, கார்த்திகை 27, ம் திகதி தொடக்கம் 2019, கார்திகை 27, வரையும் தொடர்ச்சியாக ஒன்பது வருடங்கள் மட்டக்களப்பு படுவான்கரை பெருநில மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேரடியாகச் சென்று தனித்தும் கூட்டாகவும் பல கெடுபிடி அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் விளக்கேற்றி உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூர்ந்த வரலாறுகளும் இருக்கிறது.



சிலர் கூறுவதைப்போல் 2015, நல்லாட்சி அரசு ஆட்சியமைத்த காலத்தில்தான் மாவீரர் நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது என்பது தவறான கருத்து. நல்லாட்சியரசு ஆட்சியமைப்பதற்கு முன்னரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்த 2010, தொடக்கம் 2014, வரையிலான காலத்திலும் மாவீரர் நாள் நினைவுகளும் மே18 நினைவுகளும் அச்சுறுத்தல் இருந்த போதும் தொடர்ச்சியாக நினைவு கூரல்கள் இடம்பெற்றதை யாவரும் அறிவீர்கள்.

ஆனால் 2015, நல்லாட்சி அரசு ஆட்சியமைத்த காலத்தில் அச்சுறுத்தல்கள் இன்றி சுதந்திரமாக மக்கள் திரண்டு நினைவு தினங்களை நடத்தக்கூடிய வாய்ப்புகள் இருந்தன.

2019 இலங்கையின் % 3வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தல் 2019 நவம்பர் 16 இல் நடைபெற்று ஜனாதிபதியாக கோட்டபாய தெரிவு செய்யப்பட்டதற்கு பின்னர் நவம்பர் 2%,லும் மாவீரர் நாள் துயிலும் இல்லங்களில் இடம்பெற்றன. 2020, மே,18,ல் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையும் நாம் செய்தோம். இருந்த போதும் 2020, ஆகஸ்ட்,10 பொதுத்தேர்தல் இடம்பெற்று தற்போதய அரசு ஆட்சியமைத்ததற்கு பின்னரே கடந்த 2020 கார்த்திகை 2% மாவீரர் தினத்தை நடத்த முடியாமல் நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டன.

கடந்த வருடம் கொரோனா நோய் காரணத்தையும், இந்த தடை உத்தரவுக்கு காரணமாக அமைந்தன. வடக்கு கிழக்கில் எந்த ஒரு துயிலும் இல்லத்திலும் மாவீரர் தினம் செய்ய முடியாமல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பலத்த தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் வீடுகளில் விளக்கேற்றி நினைவு கூரப்பட்டது.

தற்போதும் இந்த வருடம் மாவீரர் தினம் பொது இடங்களில் நடத்த முடியாமல் நீதிமன்ற தடை உத்தரவை எமக்கு வழங்கியுள்ளது. நீதிமன்றத்தின் கட்டளையை மதித்து துயிலும் இல்லங்களில் சென்று நினைவு கூரமுடியாமையை இட்டு வேதனை அடைகிறோம்! கடந்த வருடம் தடை உத்தரவு எனக்கு கிடைத்தபோது அந்த தடையை நீக்குமாறு கோரி நான் செய்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

எதிர்காலத்தில் தமிழ்மக்களின் மனதை புரிந்து உயிர்நீத்தவர்களை சுதந்திரமாக நினைவுகூர அரசு அனுமதிக்க வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட பாலர் பாடசலைகளுக்கு உதவி தோகை வழங்கி வைப்பு





சம்மாந்துறை நிருபர்
(ஐ.எல்.எம் நாஸிம்)

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பாலர் பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காக உதவி தொகை வழங்கும் நிகழ்வு நேற்று (23) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 85 பாலர் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 9 பாலர் பாடசாலைகளுக்கு இவ் உதவி தொகை வழங்கி வைக்கப்பட்டது. மொத்தமாக 35 பாலர் பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

அரச /தனியார் அல்லது சமய நிறுவனங்கள் நடாத்தி வருகின்ற முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களின் திருத்த வேலைகளுக்காக ஆகக்கூடிய தொகையாக 600000 ரூபாவும் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் நடாத்தி செல்கின்ற நிலையங்களுக்கு 200000 ரூபாவும் வழங்கி வைப்பட்டது.

இந்த தொகைக்கு மேலதிகமாக எல்லா நிலையங்களுக்கும் 120000 பெறுமதியான மரத்தளபாடங்கள் அடங்கிய தொகுதியொன்று ரூ 50000 /= பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் அடங்கிய பொதியொன்றும் மேலும் வழங்கி வைக்கப்பட்டது.

இன் நிகழ்வில் சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யு.எல் அஸ்லம், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தகர் எம்.வை சித்தி நபிசா, முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தகர் ஜே.சித்தி றியான,பாலர் பாடசாலைகளின் பொறுப்பதிகரிகள் என குறிப்பிட்ட அளவனோர் கலந்து கொண்டனர்.

# க.பொ.த.சாதாரணத் தரப் பரீட்சையின் சாதனையாளர்கள் பிரதமருடன் சந்திப்பு



( வாஸ் கூஞ்ஞ)

இரண்டாயிரத்து இருபது கல்வி பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி பெற்று நாட்டில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற ஐந்து மாணவ மாணவிகள் மற்றும் வரலாற்றில் முதல் தடவையாக 9 பாடங்களிலும் விசேட சித்தி பெற்ற விழிப்புலனற்ற மாணவர்கள் இருவர் ஆகியோர் (22) பாராளுமன்ற வளாகத்தில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை சந்தித்தனர்.



கௌரவ பிரதமரை சந்திப்பதற்கு வருகைத்தந்த க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சையில் சிறப்பு பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுடன் கௌரவ பிரதமர் நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன்இ அவர்களது எதிர்கால எதிர்பார்ப்புகள் குறித்து கேட்டறிந்ததுடன்இ அவர்களது எதிர்கால கல்வி நடவடிக்கைகள் வெற்றிபெற வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

சாதாரணத் தரப் பரீட்சையில் சிறப்பு சித்தி எய்திய கண்டி மஹாமாயா கல்லூரியின் சயுரன்கி தருஷிகா தெவ்மினி பிரேமசிறி, காலி சங்கமித்தா மகளிர் கல்லூரியின் ஆர்.பஹன்மா உபனி லெனோரா, ஹொரன ஸ்ரீபாலி மகா வித்தியாலயத்தின் ஆர்.ஔஷதி சந்தீபா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஸ்ரீமாதுரை சிந்தனைசெல்வன் மற்றும் கந்தானை டி மெசினத் கல்லூரியின் டீ.நிபுன் தினுக அதிகாரி ஆகிய மாணவ மாணவிகளே கௌரவ பிரதமரை சந்தித்தனர்.

வரலாற்றில் முதல் முறையாக விழிப்புலனற்ற மற்றும் விசேட தேவையுடைய மூன்று மாணவர்கள் 9 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ள நிலையில்இ அவர்களில் இருவரை கௌரவ பிரதமருக்கு அறிமுகப்படுத்திய கௌரவ கல்வி அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இவ்வாறு 9 பாடங்களிலும் விசேட சித்தி பெற்ற இரத்மலானை விழிப்புலனற்றோர் பாடசாலையின் பிரயன் கிங்ஸ்டன் மற்றும் மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரியின் பாலகிருஷ்ணன் பிரசோபன் ஆகிய மாணவர்களுக்கான வசதி வாய்ப்புகள் குறித்து கேட்டறிந்த கௌரவ பிரதமர், அவர்களது திறமைக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தின்போது கலந்து கொள்ளாத ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி எய்திய பிறப்பிலேயே உடல் உபாதைகளை கொண்ட மாத்தறைஇ பம்பரெந்த சத்தர்மராஜ மஹா வித்தியாலயத்தின் தெவ்மி ரன்சாரா ராஜபக்ஷ மாணவியும் இதன்போது நினைவுகூரப்பட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் கௌரவ கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனஇ பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தனஇ பிரதமரின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வணக்கஸ்தலங்களின் நிர்வாகத்தின் வகிபாகம் எனும் தலைப்பில் முழு நேர பயிற்சி பட்டறை

(எப்.முபாரக் )

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் ஏற்பாட்டில் 'சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளை நீக்குவதில் மத தலைவர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களின் நிர்வாகத்தின் வகிபாகம்' எனும் தலைப்பில் முழு நேரபயிற்சி பட்டறை மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாரக் தலைமையில் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று(23) சிறப்பாக நடாத்தப்பட்டது.

இதன் போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் எவ்வாறு ஏற்படுகின்றது,அதனை எவ்வாறு தீர்ப்பது மற்றும் மதத்தலைவர்களின் பங்களிப்புகளின் அவசியம் போன்றன தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.



இதனை நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவின் பிரதிநிதிகளான கலாசார உத்தியோகத்தர் கே.அன்பழகன் மற்றும் முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம்.அஸ்ரப் ஆகியோர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# மட்டக்களப்பில் புதிய பாதையில் பயணிக்கும் வர்த்தக சினிமா!!










வயது வேறுபாடின்றி அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஒரு பொழுதுபோக்கு ஊடகம் சினிமா என்று சொன்னால் அது மிகையாகாது. சினிமா என்பது வெறும் பொழுது போக்கு சாதனம் என்பதையும் தாண்டி மக்களை சிந்திக்கவும், சிரிக்கவும் வைக்கும் ஒரு உன்னத கலை வடிவமாகவும் திகழ்கிறது. சமுதாய முன்னேற்றக் கருத்துகளையும், நல்ல சிந்தனைகளையும் பார்ப்பவர் மத்தியில் விதைப்பதில் சினிமாவின் பங்கு அளப்பரியது. ஒரு சினிமா என்பது ஒரு சமூகத்தின் தனித்துவ அடையாளங்களையும் வாழ்வியல் முறைகளையும் பதிவு செய்து அடுத்த தலைமுறைக்கு கடத்தும் பணியையும் செய்கிறது.

திரைப்படத்தில் வரும் கதாபாத்திரங்களை தாமாக கற்பனை செய்து மகிழ்வதும், தம்மால் நிஜத்தில் செய்யமுடியாமல் போன ஒரு விடயத்தை திரையில் தோன்றும் நாயகன் அல்லது நாயகி செய்வதைப் பார்த்து அவர்களை உண்மையான வீரர்களாகவும் தலைவர்களாகவும் ஏற்றுக்கொள்ள வைக்கும் மாயா ஜாலத்தையும் சினிமாக்கள் செய்கின்றன.

என்னதான் சினிமா ஒரு கலைவடிவமாக இருந்தாலும், சினிமா எனச் சொல்லும் போது அங்கு பிரதானமாக தெரிவது வியாபாரமே! இன்று சினிமா என்பது மிகப் பெரிய முதலீட்டுடன் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் உலகளாவிய வியாபாரமாக தோற்றம் பெற்றுள்ளது. இலங்கையில் – அதிலும் குறிப்பாக தமிழ் திரையுலகில் பெரும் ஆதிக்கம் செலுத்துபவை இந்திய தமிழ் சினிமாக்களே என்பதை எவருமே மறுக்க முடியாது. இலங்கை தமிழ் இரசிகர்களைப் பொறுத்தவரையில் தமது இரசனை என்ற பசிக்கு இந்திய திரைப்படங்கள், தான் தீனி போட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைக்கு மூலகாரணம் எதுவென தேடிப் பார்ப்போமானால் இறுதியில் சினிமா எனும் வியாபாரம் தான் பிரதானமாக வந்து நிற்கும்.

எமது சினிமா வர்த்தக ரீதியில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளராமல் போனதற்கு இங்கு இடம் பெற்ற அசாதாரன சூழ்நிலைகளே பிரதான காரணம் என்பது ஒரு சிலரின் வாதமாக இருக்கிறது. அது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இருந்தாலும், அது மட்டுமே காரணம் என்று கூறிவிட்டு நாம் ஒதுங்கிக் கொள்ள முடியாது. இன்றைய சூழலில் எம்மத்தியில் இருக்கும் பல்வேறு சவால்களைப் புரிந்துகொண்டு அதற்கான மாற்று யுத்திகளை வகுத்து அதனூடாக எமது சினிமாவை வளர்ப்பதே பொருத்தமாக இருக்கும்.

அந்தவகையில் வர்த்தரீதியிலான சினிமாக்களை தயாரிப்பதற்கு எமக்கு முன் உள்ள பிரதான சவால்களாக நவீன தொழில் நுட்பங்களைப் பெறக்கொள்வதும், அதனைக் கையாள்வதற்கான அனுபவமிக்க கலைஞர்களை உருவாக்குவதும், முழு நீளத் திரப்படங்களை உருவாக்க எடுக்கும் நீண்ட காலம், பெரும் பொருட்செலவு, என நீண்ட பட்டியல் காணப்படுகிறது. இவை தவிர இந்தியத் திரைப்படங்களின் பெரும் ஆளுமைக்கு மத்தியில் எமது ஈழத்து திரைப்படங்களை நோக்கியும் இரசிகர்களைத் திருப்புவதும் பெரும் போராட்டமாகவே அமையும். இவற்றிற்கு மத்தியில் எமது திரைப்படங்களை வர்த்தகரீதியில் வளர்க்கவே முடியாதா எனும் கேள்விக்கு முடியும் எனும் திடமான நம்பிக்கையில் புதிய முயற்சிகள் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

வர்த்தக சினிமாவை வளர்க்க புதியதொரு கோணத்தில், புதியதொரு யுக்தியாக மட்டக்களப்பில் முழுநீளத் திரைப்படங்களுக்கு பதிலாக அதன் குறுகிய வடிவமாக சுமார் 30 முதல் 45 நிமிடங்களுக்கு இடைப்பட்ட சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு அவை திரையரங்குகளில் வெளியிடப்பட்டு வருவதுடன், ரசிகர்களின் அமோக ஆதரவினையும் பெற்றுவருகின்றது.

இந்தப் பரீட்சார்த்த முயற்சிக்காக மட்டக்களப்பில் வித்திட்டவர்களாக சமூக ஆர்வலரும், பல்துறைக் கலைஞருமான தயாரிப்பாளர் ப. முரளிதரன் அவர்களும், இயக்குநர் கு. கோடீஸ்வரன் அவர்களும் திகழ்கின்றனர். இவர்களது முயற்சியில் முரளிதரனின் விசுவல் ஆர்ட் மூவீஸ் எனும் தயாரிப்பு நிறுவனத்தினூடாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சுமார் 30 நிமிடங்கள் நீளம் கொண்ட மாயை மற எனும் சிறிய திரைப்படம் திரையிடப்பட்டு அமோக வரவேற்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து இந்த இருவரின் கூட்டணியில் தளராதவன் எனும் மற்றுமொரு சிறிய திரைப்படம் வெளியிடப்பட்டு அது முந்தைய சாதனைகளைத் தகர்த்ததுடன் பெருமளவான உள்ளூர், தேசிய மற்றும் சில தென்னிந்திய ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிட வேண்டிய விடயம்.


Dr. சுகுணன்


முரளிதரன்


கோடீஸ்வரன்

முழு நீளத் திரைப்படத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக அமைந்திருந்தாலும் குறுகிய நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இந்த சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதால் தயாரிப்பு செலவு குறைக்கப்படுவதுடன், குறுகிய காலத்திற்குள் தொடர்ச்சியாக படங்களை வெளியிட்டு இரசிகர்களின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பது ஒரு தயாரிப்பாளராக ப. முரளிதரன் அவர்களது அசைக்கமுடியாத நம்பிக்கையாக காணப்படுகிறது. இதனை அவர் பல பேட்டிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் தொடர்ச்சியாக கூறி வருவதுடன் இந்த உத்தியைப் பின்பற்றி பலரும் இவ்வாறான சினிமாக்களை தயாரிக்க முன்வரவேண்டும் என்றும் கோரிவருகின்றார்.

மறுபுறம், மட்டக்களப்பின் பிரபலமான இயக்குநராக அடையாளம் காணப்பட்டுள்ள கு. கோடீஸ்வரன் அவர்களும் திரையரங்கு இரசிகர்களைக் கவரும் விதமான ஜனரஞ்சக சினிமா பாணியில் சிறந்த கதை, திரைக்கதைகளைக் கொண்டு படங்களை இயக்கி வருகின்றார். சிறிய திரைப்படங்களாக இருந்தாலும் அவை தொடர்ச்சியாக வெளியிடப்படும் போது ஏனைய தொழில்துட்பக் கருவிகளின் தரமும், கலைஞர்களின் திறனும் தானாக மேம்படும் எனும் நம்பிக்கையை அவர் கொண்டுள்ளார்.

இவர்களின் இந்த முயற்சி மக்கள் மத்தியில் பெரும் ஆதரவையும், வரவேற்பையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம். நல்ல முயற்சிகளுக்கு எப்பொழுதும் மக்களின் ஆதரவு இருக்கும் என்பதற்கு சான்றாக அவர்களது திரைப்படங்கள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பங்களில் திரையரங்கில் முண்டியடித்த சனக்கூட்டமே சான்று. மேலும் இந்த முயற்சிக்குக் கிடைத்த ஓர் வெற்றியாக மட்டக்களப்பில் வசித்துவரும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்திய கலாநிதி கு.சுகுணன் அவர்களும் சினிமா தயாரிப்பில் தற்பொழுது ஆர்வம் காட்டுகிறார்.

அவர் சிப்ஸ் சினிமாஸ் எனும் தனது தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக கலிகாலன் எனும் சிறிய திரைப்படத்தினை, தற்பொழுது தயாரித்து வருகின்றார். 2021 – கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடப்படவிருக்கும் இத்திரைப்படத்திற்கும் மக்கள் பெரும் வரவேற்பை கொடுத்திருப்பது மட்டக்களப்பில் சினிமா வர்த்தகரீதியில் வெற்றி பெறுவதற்கான காலம் கனிகின்றது என்றே கூறலாம். மேலும் இதுவரை மட்டக்களப்பு திரையரங்குகளில் மாத்திரம் திரையிடப்பட்டு வந்த இவ்வகையான சிறிய திரைப்படங்கள், கலிகாலன் திரைப்படத்தின் மூலமாக அம்பாறை மாவட்டத்திற்கும் நகர்ந்திருப்பது இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் மற்றுமொரு சான்று என கூறலாம்.

ஒவ்வாரு பெரிய சாதனைகளும் சிறிய முயற்சியிலும், இடைவிடாத உழைப்பிலும் தான் படைக்கப்படுகின்றன. அந்தவகையில் இந்திய சினிமா எனும் பெரும் விருட்சத்தின் அடியில் துளிர்க்கும் எம்மவர் சினிமாவும் ஒரு பெரும் விருட்சமாக வளர வேண்டுமானால் இரசிகர்களின் ஆதரவு எனும் உரமும், இலாபம் எனும் நீரும் அவசியம். தாம் செலவழிக்கும் பணம் திரும்பி வரும் எனும் நம்பிக்கை மிகவும் தூர்ந்து போயிருக்கும் நிலையிலும் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ச்சியாக படம் தயாரிக்க முன்வந்திருக்கும் ப.முரளிதரன், வைத்திய கலாநிதி கு.சுகுணன் போன்றவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அதே வேளை எமது ஈழத்துக் கலைஞர்களின் பாரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான திரைப்படங்களை நாம் ஆர்வத்துடன் சென்று பார்வையிடுவதுடன், எமது கலைஞர்களை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாமல் எமது கலைஞர்களின் திறமைகளை நாம் பாராட்டுவதன் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக சினிமா பாரிய வளர்ச்சி காணும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

அத்தோடு எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியாகவுள்ள ‘கலிகாலன்’ திரைப்படத்தை திரையரங்குகளில் சென்று பார்வையிடுவதுடன் ரசிகர்கள் தமது ஆதரவை வழங்குவதன் மூலம் மேலும் பல சினிமாக்கள் கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் இருந்து பல திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கும், மட்டக்களப்பு சினிமா வர்த்தக ரீதியில் வளர்ச்சி காண்பதற்கும் சினிமா துறை சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்களின் ஆதரவினையும் மட்டக்களப்பில் இருந்து சினிமாத்துறைக்காக பாரிய பங்காற்றிவரும் கலைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பால்மா கொடுப்பதால் தாய்க்கும் குழந்தைக்கும் இடையான உணர்வுபூர்வமான இணைப்பில் பாதிப்புகள் ஏற்படும்

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் விஷ்ணு சிவபாதம் வழங்கிய நேர்காணல்;

**? தாய்ப்பாலின் சிறப்பு பற்றி விளக்க முடியுமா?**

இன்றைய நவீன காலத்திலும் இலங்கையில் பெரும்பாலான தாய்மார்கள் தங்களது குழந்தைக்கு தாய்ப்பாலை முதன்மையான உணவாகக் கொடுக்கின்றனர். இது உண்மையிலேயே நாம் பெருமைப்படக் கூடிய ஒரு விடயமாகும்.

பிறந்த சிசு தாய்ப்பாலைத் தாயிடமிருந்து பெறுவதற்கான அனைத்து உரிமைகளுக்கும் உரியதாகின்றது. இது உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நடைமுறையாகும். தாய்மார்கள் தங்கள் குழந்தையின் முதல் ஆறு மாத காலத்துக்கு தாய்ப்பாலை மட்டுமே உணவாகக் கொடுத்தல் வேண்டும். அதன் பிறகு கண்டிப்பாக ஆறு மாதங்களின் பின்னர் தாய்ப்பாலுடன் சேர்த்து திண்ம உணவுகளை கொடுக்க ஆரம்பித்தல் வேண்டும். வேலைகளுக்குச் செல்லும் தாய்மார்கள் நான்கு மாத முடிவில் தாய்ப்பாலுடன் திண்ம உணவுகளை கொடுக்கத் தொடங்கலாம்.

குழந்தையின் முதல் ஆறு மாதத்துக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் தாய்ப்பால் மூலம் பெற்றுக்கொள்கின்றது. குழந்தை பிறந்து 3 தொடக்கம் 5 நாட்களுக்குள் சுரக்கப்படும் தாய்ப்பால் கொலஸ்ட்ரம் என அழைக்கப்படும். அது, அளவில் சிறியதாகவும், மஞ்சள் நிறத்திலும் இருந்தாலும் குழந்தைக்கு தேவையான அளவு பாலை கொண்டிருக்கும், குறிப்பாக பிறந்த சிசுவின் நிர்ப்பீடனத் தொகுதியை மேம்படுத்துவதற்கு அது உதவுகின்றது.

பல பெற்றோர்கள் எனது மனைவிக்கு தாய்ப்பால் வருவது குறைவு, பிள்ளை எப்பொழுதும் அழுது கொண்டிருக்கிறது என்ன பால்மா கொடுக்கலாம் என என்னிடம் கேட்பார்கள். இந்தக் கேள்வி அவர்களின் மனதில் தோன்றுவது ஒன்றும் புதிரான விடயமல்ல.

**? தாய்ப்பால் ஊட்டுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?**

தாய்ப்பால் ஊட்டுவதால் குழந்தைக்கும், தாய்க்கும் பல நன்மைகள் ஏற்படும். முக்கியமாக குழந்தைக்கு உகந்த ஊட்டச்சத்தும் வளர்ச்சிக்குமான அனைத்து அம்சங்களும் தாய்ப்பாலில் அடங்கியுள்ளது. குறிப்பாக மூளை வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என்று ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி தாய்ப்பாலூட்டல் மூலம் கிடைக்கின்றது.

அதாவது,தாயிடம் இருக்கும்அதிகமான நோய் எதிர்ப்பு சக்திதாய்ப்பால் மூலம் குழந்தைக்கு நேரடியாகக் கிடைக்கின்றது. இதனால் வாந்திபேதி, சுவாச சம்பந்தமான நோய்கள் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றது. குறிப்பாக குழந்தை பிறந்தபின் முதல் 3 தொடக்கம் 5 நாட்களில் வரும் பாலில் கொலஸ்ட்ரம் எனப்படும் எதிர்ப்பு சக்தி சிசுவுக்கு கிடைப்பதால் அந்தக் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்



தன்மையை அது வழங்குகின்றது.

மேலும், தாய்ப்பாலூட்டல் மூலம் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, ஒவ்வாமை, புற்றுநோய்கள், நீரழிவு மற்றும் அதிக உடற்பருமன் போன்ற நோய்களிலிருந்தும் தடுக்கின்றது. தாய்ப்பாலை குழந்தையால் இலகுவாக அகத்துறிஞ்சப்படக் கூடியதாக உள்ளதால் இதுவே முதல் ஆறு மாத காலத்திற்கு குழந்தைக்குரிய சிறப்பான போசாக்கு உணவாகும்.

தாய்ப்பால் ஊட்டுவதால் தாய்மாருக்கு மார்பக புற்றுநோய், சூலகப் புற்றுநோய், நீரிழிவு மற்றும் குழந்தை பிறப்பின் பின் ஏற்படும் மன உளைச்சல் போன்ற நோய்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்றனர். அதை விட முக்கியமாக தாய்க்கும் சேய்க்கும் இடையில் ஒரு உணர்வு மிக்க பிணைப்பையும் ஏற்படுத்துகிறது.

**? தாய்ப்பால் கொடுக்கும் சரியான முறைகள் பற்றி தெளிவுபடுத்த முடியும்?**

தாய்ப்பால் ஊட்டுவது ஒரு இயற்கையான விடயம் என்றாலும் அதை சரியான முறையில் கொடுக்காத போது சிலவேளைகளில் அந்த முயற்சி தோல்வி அடையலாம். குறிப்பாக, முதல் குழந்தைக்கு பாலூட்டும் தாய்மாருக்கு ஒரு சவாலான விடயமாகவும் அமையும்.

உண்மையில் தாய்மாருக்கு, தாய்ப்பாலின் சிறப்பு பற்றியும் அதன் தேவையையும் கர்ப்ப காலத்தில் இருந்தே போதித்தல் வேண்டும். தாய்ப்பாலூட்டல் பற்றிய தெளிவைப் பெறவும் அதன் மூலம் வெற்றி பெறுவதற்கும் முறையானஇணைப்பும் நிலைப்படுத்தலும் முக்கியமானதாகும்.

இதில் சிக்கல்கள் உள்ள தாய்மார்கள் வைத்தியசாலையில் உள்ள தாய்ப்பாலூட்டல் முகாமைத்துவ நிலையங்களிலோ அல்லதுஉங்களது பிரதேசங்களிலுள்ள midwife இடமோ கேட்டு அறிந்து கொள்ளலாம். ஏற்கனவே தாய்ப்பால் கொடுத்து அனுபவம் உள்ள தாய்மாருடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதனால் மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**? எந்த நேரங்களில் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும்?**

தாய்ப்பால் நிறையுணவு என்பதால் குழந்தைக்கு பசி எடுக்கும்போது கொடுக்க வேண்டும்.

**? குழந்தை பசியுடன் உள்ளது என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?**

குழந்தை பசியுடன் உள்ளது என்பதை பின்வரும் காரணிகளை வைத்து அறிந்து கொள்ளலாம். அதாவது, குழந்தை நித்திரையில் இருந்து எழும்பி கண்ணைத் திறந்து விழிப்பாக இருந்து வாயை அகலத்திறந்து கொட்டாவி விடும் போது, குழந்தை தனது கையை மடித்து வாயில் வைத்து உறிஞ்சும்போது, மேற்கூறிய அறிகுறிகளை அவதானிக்க தாய் தவறும் போது குழந்தை பசியால் அழுகின்ற போது அறிந்து கொள்ளலாம்.

குறிப்பாக, இங்கு தாய்மார்கள் கவனிக்க வேண்டியது குழந்தை தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் தூங்குமாயின் குழந்தையை எழுப்பி தாய்ப்பால் ஊட்டவேண்டும், முக்கியமாக இரவு வேளைகளில் குழந்தையை எழுப்பி தாய்ப்பால் ஊட்டவேண்டும்.

**? குழந்தை போதுமான அளவு தாய்ப்பால் குடித்துள்ளது என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது?**

குழந்தை போதுமான அளவு தாய்ப்பால் குடித்த பின்பு அது மார்பகத்திலிருந்து தானாகவே வாயை எடுக்கும். குறிப்பாக, குழந்தை தாய்ப்பால் குடிக்கும் நேரம் ஒவ்வொரு குழந்தைக்கும் வேறுபடும். நன்றாக தாய்ப்பால் குடித்த குழந்தை மகிழ்ச்சியாக தாயுடன் விளையாடும் அல்லது தூங்கிவிடும்.தாய்ப்பால் கொடுக்கும் போது தாய்மாருக்கு மார்பகத்தின் பாரம் குறைவது போன்ற உணர்வு ஏற்படும் மேலும் மற்றைய மார்பகத்திலிருந்து சிறிதளவு பால் வெளியேறும். இவையெல்லாம் தாய்ப்பாலூட்டல் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதற்குரிய அறிகுறிகள் ஆகும்.

**? தாய்ப்பால் ஊட்டும் போது குழந்தைக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமா?**



குழந்தைக்குத் தேவையான எல்லா ஊட்டச் சத்துக்களையும் கனியுப்புக்களையும் தாய்ப்பால் கொண்டிருப்பதால் முதல் ஆறு மாத காலத்துக்கு தாய்ப்பாலுடன் வேறு எதையும் (தண்ணீர் உட்பட) கொடுக்கத் தேவையில்லை.

**? தாய்ப்பாலுக்குப் பதிலாக பால்மா வகைகளை குழந்தைக்கு கொடுப்பதால் ஏற்படும் பாதிப்புகள் என்ன?**

பால்மா கொடுப்பதால் தாய்க்கும் குழந்தைக்கும் இடையான உணர்வு பூர்வமான இணைப்பில் பாதிப்புகள் ஏற்படும். மேலும் குழந்தை அடிக்கடி வாந்திபேதி, சுவாச நோய்கள், காது நோய்கள் போன்ற தொற்று நோய்களுக்கு உட்படும். குறைந்தளவான மற்றும் அதிகளவு ஐதாக்கப்பட்ட பால்மா மூலம் குழந்தைக்கு மந்த போசனை ஏற்படலாம் அல்லது அதிகளவு பால் கொடுப்பதால் உடற்பருமன் அதிகரித்து அதன் மூலம் பிற்காலத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம். அதாவது, ஒவ்வாமை, ஆஸ்துமா போன்ற நோய்கள் அதிகளவு ஏற்படும். குழந்தையின் புத்திக் கூர்மையில் பாதிப்புக்கள் ஏற்படலாம். முக்கியமாக பெற்றோர்களுக்கு மேலதிக செலவீனங்களை ஏற்படுத்தும்.

**? இது தொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

பாலூட்டும் தாய்மார் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது தாய்ப்பால் ஊட்டக் கூடாது, மார்பகங்கள் வீக்கம் அடைந்து இருக்கும்போது தாய்ப்பால் ஊட்டக் கூடாது, அதிக வெப்பமான காலங்களில் தாய்ப்பாலுடன் சேர்த்து தண்ணீரும் கொடுத்தல் வேண்டும், தாய்ப்பால் கொடுப்பதால் தாய்மார்களின் உடல் கட்டமைப்பு பாதிப்படையும், சிறிய மார்பகங்கள் உடைய தாய்மார் மற்றும் முலைக் காம்பு தட்டையாக உள்ள தாய்மார் பாலூட்டுவது கடினம் என்ற பொதுவான மூடநம்பிக்கைகள் பலரிடம் உள்ளது. இதிலிருந்து நாம் விழிப்படையவேண்டும்.

தாய்மார் நோயுற்றிருக்கும் போதும் தாய்ப்பாலூட்டலாம், மார்பகங்கள் வீக்கம் அடைந்தால் கண்டிப்பாக பாலூட்ட வேண்டும் அவ்வாறு இல்லையாயின் மார்பகத்தில் சிதழ் கட்டிகள் ஏற்படலாம், அதிக வெப்பமான காலங்களில் தாய்ப்பாலுடன் சேர்த்து நீர் கொடுக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை எனென்றால் தாய்ப்பாலில் போதியளவு நீருள்ளது, தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட மேலதிக உடற்பருமனை குறைக்க உதவும், குழந்தை எந்த வகையான மார்பகத்திலும் தாய்ப்பால் குடிக்கக்கூடிய இசைவாக்கத்தை தாமாவே ஏற்படுத்திக்கொள்ளும்.

எனவே இவ்வாறான மகிமைகளை கொண்ட தாய்ப்பாலை தங்களது குழந்தைக்கு கொடுப்பதை உறுதி செய்வதன் மூலம் வளமானதும், புத்தி கூர்மையும் உடைய சமூதாயத்தை உருவாக்கிக்கொள்ளலாம் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமே இல்லை.






# தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய முன்னைய வரலாற்றுப் பார்வையை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தும் அரிய தமிழ்க் கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு

**பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



### கடந்த சுபீட்சத்தின் தொடர்ச்சி...

இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தபோது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெத்டுதுவந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன. சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர். இந்நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெடுப்புகள் மூலம் கலிங்கநாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.



யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்புபடுத்தி பேராசிரியர் இந்திரபாலா அவர்களால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அக்கட்டுரையை மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில்(காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப் படவில்லை எனக் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது . அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும். கோமரன்கடவல சிவன்கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்தொடரால் தெரிகின்றது. காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து,



தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திறகும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும் காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம் பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்ளும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. முதலில் 'ிஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய நாயநாரை என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார். இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும். மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை லச்சிகாமபுரம் என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார். இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு





ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும். பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் மாநாமத்துநாடு என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார். இக்கல்வெட்டில் 'பற்று' என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் 'பத்து' என அழைக்கப்படுகின்றது. இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்ததாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக் கல்வெட்டைக் படியெடுக்க வேண்டியிருந்தது. ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்கவேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும். இவ்விடத்தில் இக்கல்வெட்டைப் படிப்பதற்கும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணரவும் உதவிய என் ஆசிரியர்களுக்கும், எனது தொல்லியல் பட்டதாரி மாணவர்களுக்கும், ஆய்விடத்தை அடையாளப்படுத்திக் காட்டியதுடன் எம்முடன் இணைந்து பணியாற்றிய திருகோணமலை நண்பர்களுக்கும் என் நன்றிகள்